[2004 ஜூலை 31

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004 @) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமா?

@ 23-7-2004 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப் பெற்றுள்ளது.

2004 ஜூலை 31]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Dr. Johna Mathai, தலைவர், வரி விசாரணை Commission பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் முதன்முதலாக 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிக்கும் முறை அமல்படுத்தப்பட்டது. இந்தச் சட்டம் அமலில் இருக்கும்போது மலைத்தோட்டப் பயிர்கள்மீது மட்டும் வரி விதிக்கப்பட்டது. பின்னர் 1958 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதும் வரி விதிக்கும் முறை புகுத்தப்பட்டது. இதற்குப் பொதுவாக இணக்க முறையில் 20 பகிர்மான ஏக்கர் வரையில் வரி விலக்கும், வருமான அடிப்படையில் ரூ.10,000-க்கும் மேலாக வரி விதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிற்பகல் 4-55

அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவற்றிலும் 1950 மற்றும் 1957-லிருந்து வேளாண்மை வருமான வரி விதிக்கும் முறை நடைமுறையில் உள்ளது. இவ்விரு மாநிலங்களில், கேரள அரசு தனது சட்டம் 15/91-ல் 1-4-1981-லிருந்தும் 1-12-1982 முதல் மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதான வரி இரத்து செய்யப்பட்டது. இவ்வாறாக அண்டை மாநிலங்களில் மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம் மீதான வரியை இரத்து செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் மலைத்தோட்டம் அல்லாத பயிர்கள்மீது வரி விதிப்பு செய்யப்பட்டு வந்துள்ளது.

எனவே, திருத்தச் சட்டம், 40/91-ன்படி மலைத்தோட்டம் அல்லாத வேளாண்மை வருமானம்மீதான வரி இரத்து செய்யப்பட்டு, மலைத்தோட்டப் பயிர்களான டீ, காபி, இரப்பர், ஏலக்காய், கிராம்பு, பாக்கு மற்றும் மிளகு ஆகியவற்றிற்கு மட்டும் 1-4-2002 முதல் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 8 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இச்சட்டத்தின்கீழ் இரண்டு வகையான வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. ஒன்று, இணக்க முறை. இரண்டு, வருமான அடிப்படை. தமிழ்நாட்டில் இணக்க முறை வரி விதிப்பு 1955 முதல் நடைமுறையில் உள்ளது. 8 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் வரிதாரருக்கு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955-ன்படி 1-4-1992 முதல் இணக்க முறை பதிவு முறைப்படி வரி விதிப்பிற்கு உட்படுகிறார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2004 ஜூலை 31

INDCOSERVE புள்ளிவிவரப்படி தமிழ்நாடு முழுவதும், தேயிலைப் பயிரின்கீழ் 1 இலட்சத்து 726 ஏக்கர் நிலமும், coffee-யின்கீழ் 67,350 ஏக்கரும், ஏலப் பயிரின்கீழ் 9,200 ஏக்கரும், இரப்பர் 23,293 ஏக்கரும் 2002-2003-ல் பயிர் செய்யப்பட்டது.

1-4-1992 முதல் சட்டம் 40/91, 1997-98-ல் மாநில அரசுக்கு வருமானமாக 36.36 கோடி ரூபாய் வருமானம், மிகுதியான வருமானமாகக் கிடைத்துள்ளது. இந்த மிகுதியான வருமானம் கிடைத்ததற்கு அடிப்படை ஆதாரமான வருமான வரி அடிப்படையில் வரி விதிக்கும் நபர்களுக்கு, அவர்கள் கோரிய செலவினத்தை முழுவதுமாக அனுமதித்த பிறகு கிடைக்கும் நிகர வருமானத்தில் விதிக்கப்பட்ட வரியாகும். இவ்வாறாக 1997-98 ஆம் ஆண்டில் உச்ச நிலையில் இருந்துள்ள கேட்பு வருமானம் கடந்த மூன்று ஆண்டுகளாக தோட்டத் தொழில் பயிர்கள் எதிர்கொண்டுள்ள உலக அளவிலான விலை வீழ்ச்சி முதலியவற்றால் சரிந்தது. இவ்விலை வீழ்ச்சியின் அளவுகோல் விவசாயிகளுக்கு அதிகப்படியான நஷ்டத்தினை ஏற்படுத்தியது. இதனால் மலைத்தோட்டப் பயிர் விவசாயிகள் சங்கம் தற்போதுள்ள விவசாய வருமான வரியினைக் குறைத்தும், மத்திய வருமான வரியினைக் கருத்திற்கொண்டு வரி விதிக்கவும், வேளாண்மை வருமான வரியினை 10 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்யக் கோரியும் கோரிக்கை விடுத்ததில், தமிழ்நாடு அரசு விவசாயிகளின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டும், பருவ மழை பொய்த்ததனால் ஏற்பட்ட சீர்கேடுகள், தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை மற்றும் விலை வீழ்ச்சி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் இவற்றை முன்னேற்றுவதற்கான அவசியத்தினையும் கருத்திற்கொண்டும், சரியான நேரத்தில் வேளாண்மை வருமான வரியினை முழுவதுமாக இரத்து செய்ய முடிவு எடுத்துள்ளது. ஆகவே, சரியான நேரத்தில் வேளாண்மை வருமான வரியினை மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுவதுமாக இரத்து செய்ய ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி மாண்புமிகு நிதி அமைச்சர் 1-4-2004 முதல் மலைத்தோட்டப் பயிர்மீதான வேளாண்மை வருமான வரி முழுவதுமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவித்ததன்பேரில், 1-4-2004 முதல் பெறப்படும் வேளாண்மை வருமானம் 2005-2006 வரி ஆண்டிற்கு வரி விதிப்பிற்கு

2004 ஜூலை 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இதன் மூலம், 3,479 இணக்க முறை வரிதாரர்களும், 288 வருமான அடிப்படை வரிதாரர்களும், ஆக மொத்தம் 3,767 வரிதாரர்கள் பயன் அடைவார்கள். இவ்விலக்களிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள 1,50,667.93 ஏக்கர் மலைத்தோட்டப்பயிர் நிலங்கள் முழுவதுமாக விலக்களிப்புச் செய்யப்படுகிறது. இந்நிவாரணத்தினால், நலிவடைந்த மலைத்தோட்டப் பயிர்த் தொழில்கள் விரைவாக முன்னேறவும், தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக் குறையாது இருக்கவும், மேலும் கூடும் வகையில் வேளாண்மை வருமான வரியை இரத்து செய்வது இன்றியமையாதது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 5–00

(ஒ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS